தினையே இந்த அவையின் சார்பாகப் பாராட்டுவதாக எடுத்துக்கொண்டு, அடுத்த அலுவலுக்குச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-15

(இ) வாகனங்களில் சுழலும் சிவப்பு விளக்கைப் பயன்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? திரு. ஞானசேகரன், என்ன வேண்டும்? (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்கு முந்தைய நாள் தங்களிடம் வந்து, மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர் போன்றவர்கள் எல்லாம் சிவப்பு விளக்கினைப் போட்டுக்கொண்டு போய்க்கொண்டுள்ளனர் என்ற ஒரு கருத்தைக் கொண்டு வந்தேன். யார், யாரெல்லாம் சிவப்பு விளக்கைத் தங்களுடைய காரில் பொருத்திக்கொண்டு. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை High Court-ல் ruling கொடுத்து இருக்கிறார்கள். போய்ப் பாருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், என்ன? (குறுக்கீடுகள்) மதுரை High Court-ல் ruling கொடுத்து இருக்கிறார்கள். அதை எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்) முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு உறுப்பினர்கள் பல பிரச்சினைகளை இங்கே கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் ஏற்கெனவே இங்கு தெரிவித்ததைப்போல், இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு, இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டியிருக்கின்ற சூழ்நிலையில், மற்ற பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும், நாளை முதல் அவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை எடுப்பதற்கான (குறுக்கீடுகள்) தயவுசெய்து இன்று நடைபெறவிருக்கின்ற இரண்டு மானியங்களை நிறைவேற்றித் தருவதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.